தினமணி

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைந்தது

First Published : 13 Aug 2012 01:10:32 PM IST

தருமபுரி, ஆக.12: கர்நாடக மாநிலம், கபினி அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீர் ஞாயிற்றுக்கிழமை 9 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கர்நாடகம், கேரள மாநிலங்களில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து, கபினி அணையிலிருந்து காவிரியாற்றில் வியாழக்கிழமை திறந்துவிடப்பட்ட 16 ஆயிரம் கன அடி நீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு சனிக்கிழமை வந்தது. ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்ததைத் தொடர்ந்து நீர்வீழ்ச்சிகளில் சுற்று0லாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், ஒகேனக்கல் சென்று பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். எதிர்பார்தப்படி நீர்வரத்து அதிகரிக்காமல் குறைந்தது. ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி நிலவரப்படி ஒகேனக்கல்லில் நீர்வரத்து 9 ஆயிரம் கன அடியாக இருந்தது என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்வரத்துக் குறைவாக இருந்தாலும், நீர்வீழ்ச்சிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிக்கவும், பரிசலில் செல்லவும் தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

## நாட்டுக் கோழிப் பண்ணை அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 13 Aug 2012 12:20:45 PM IST

நாகப்பட்டினம், ஆக. 12: நாகை மாவட்டத்தில் நாட்டுக் கோழிப் பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், கோழியின மேம்பாட்டுத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு கோழியின மேம்பாட்டுத் திட்டத்தை அண்மையில் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், நாகை மாவட்டத்தில் நாட்டுக் கோழி வளர்ப்பை மேம்படுத்தும் வகையில், ஒரு பயனாளிக்கு ரூ. 1.17 லட்சம் மதிப்பில் 35 பயனாளிகள் இத்திட்டத்தில் பயன் பெறலாம். திட்ட மதிப்பில் 50% மானியத்தில் நிதி உதவிகள் வழங்கப்படும்.

இதில், கொட்டகை அமைத்தல், கோழிக்குஞ்சு மற்றும் தீவனம், உபகரணங்கள் வாங்குவதற்கு முதல் தவணையாக 25% மானியத் தொகை ரூ. 29,250 வழங்கப்படும். திட்டத்தின் இறுதியில் நபார்டு வங்கி மூலம் 25% மானியமும், ஆதிதிராவிட இனத்தவருக்கு 33% மானியமும் வழங்கப்படும்.

முதல் தவணை கோழிக்குஞ்சுகள் 100% மானியத்திலும், 2-வது தவணை கோழிக் குஞ்சுகள் 30% மானியத்துடன் ரூ. 3,260-க்கும், மூன்றாவது தவணை கோழிக்குஞ்சுகள் 30% மானியத்தில் ரூ. 2,500-க்கும் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்குக் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மூலம் 5 நாள்கள் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்படும். மருத்துவம் மற்றும் தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், ஒரு பயனாளிக்கு ஒரு முறை மட்டுமே மானியம் வழங்கப்படும். கிராமப்புற பகுதிகளில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படும். 12 முதல் 14 வார காலத்துக்குள் நாட்டுக் கோழி விற்பனை செய்யும் அளவுக்கு வளர்ந்து விடும் என்பதால், ஒரு ஆண்டில் 14 வார சுழற்சியில் 3 தவணையில் 250 கோழிகள் வளர்க்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

நாட்டுக் கோழிப்பண்ணை அமைக்க ஆர்வமுள்ள விவசாயிகள், கால்நடை பராமரிப்புத் துறை மருத்துவ நிலையங்கள் அல்லது குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

## பால் உற்பத்தியை அதிகரிக்க 50 சதவீத மானியத்தில் தீவனங்கள் வழங்க கோரிக்கை

First Published : 14 Aug 2012 09:27:35 AM IST

திண்டுக்கல், ஆக. 13: ஆவின் பால் உற்பத்தியை அதிகரிக்க 50 சதவீத மானியத்தில் அரசு தீவனங்களை வழங்க வேண்டும் என தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் முகமது அலி கோரிக்கை விடுத்துள்ளார்.

திண்டுக்கல்லில் அண்மையில் நடைபெற்ற தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில குழுக் கூட்டம் சங்கத்தலைவர் முகமது அலி தலைமையில் நடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது:

கால்நடை தீவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. இந்நிலையில் பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.25, எருமைப் பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.35 என கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும், பால் உற்பத்திச் செலவில் 65சதவீதம் கால்நடை தீவனத்திற்கே ஆகிறது. எனவே பால் உற்பத்தியாளர்கள் சுமையை குறைக்கும் வகையில் ஆவின் தீவன உற்பத்தியை அதிகரிக்க 50 சதவீதம் மானிய விலையில் தீவனங்களை வழங்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தைப் போல் தமிழக அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு 3 சதவீதம் மானியம் வழங்க வேண்டும். ஆரம்ப சங்க செயல்பாட்டிற்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ.1 மானியம் வழங்க வேண்டும். பால் கூட்டுறவு சங்களுக்கு உடனடியாக தேர்தல் நடத்திட வேண்டும் என்றார் சங்கத் தலைவர் முகமது அலி.

## பசுமை வீடுகள் திட்டம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம்

First Published : 14 Aug 2012 09:41:18 AM IST

திருப்பத்தூர், ஆக, 13: திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பசுமை வீடுகள் கட்டும் பயனாளிகளுடன் திங்கள்கிழமை கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழக அரசின் சிறப்பு முன்னோடித் திட்டமான சூரிய விளக்குடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 40 ஊராட்சிகளில் 114 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுடன் வீடுகள் கட்டுவது சம்பந்தமான கலந்தாய்வு கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் பரமசிவம் (கிராமஊராட்சி) தலைமை வகித்தார்.

ஒன்றியப் பொறியாளர் பழனியப்பன் முன்னிலை வகித்தார். பொறியாளர் செந்தில் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் மாதிரி வரைபடம் மூலம் வீடுகட்டும் அளவு, அமைப்பு முதலியன எடுத்துக் கூறப்பட்டு தொழில்நுட்ப அளவிலான ஆலோசனை வழங்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 89 பயனாளிகளும், ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 21 பயனாளிகளும், மாற்றுத்திறனாளிகள் 4 பயனாளிகளும் இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## ஆக.17-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 14 Aug 2012 09:29:16 AM IST

தேனி, ஆக. 13: தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆக.17-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. ஆட்சியர் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் விவசாயிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகள் குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) செ.முத்தையா தெரிவித்தார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

# சம்பா பருவத்தில் நெல் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2012,01:16 IST

திருவள்ளூர் : குறுவை சாகுபடியில், நெல் விலை உயர்ந்ததால், சம்பா பருவத்தில் ஆர்வத்துடன் நெல் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பலர், அடிக்கடி ஏற்படும் மின்தடை, உரம் விலை உயர்வு, கூலி ஆட்கள் பற்றாக்குறை என பல்வேறு பிரச்னைகளால், தங்களது விளை நிலத்தை வீட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்து வந்தனர்.

நெல் விலை உயர்வு

சிலர் அதையும் மீறி, பணத்தை செலவழித்து, நிலத்தில் நெல் பயிரிட்டும், அதற்கான விலை கிடைக்கவில்லை.

கடந்த சம்பா பருவத்தில், 76 கிலோ எடை கொண்ட, ஒரு மூட்டை நெல், 700 ரூபாய்க்கு விலை போனது. இதில் லாரி வாடகை போக, 650 ரூபாய் மட்டுமே கிடைத்தது. இதனால் விவசாயம் செய்யாமல், பலர் விளை நிலங்களை கரம்பாக போட்டனர்.

இந்நிலையில், தற்போது குறுவை சாகுபடியில், ஒரு மூட்டை நெல், 1,150 ரூபாய்க்கு விற்பனை ஆனது.

இதில் லாரி வாடகை போக, ஒரு மூட்டைக்கு, 1,100 ரூபாய் வீதம், ஒரு ஏக்கரில், 40,000 ரூபாய் வரை கிடைத்தது.

இதில் உரம், களை எடுத்தல், அறுவடை செய்தல், ஏர் உழுதல் போன்ற செலவுகள் போக, 10,000 ரூபாய் வரை விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது.

இதனால் குறுவை பட்டத்தில் பயிரிடாத விவசாயிகள் கவலை அடைந்தனர். தற்போது நெல் விலை உயர்வால், குறுவை சாகுபடியில் ஈடுபடாமல் விளை நிலங்களை கரம்பாக போட்ட விவசாயிகள், சம்பா பருவத்தில் சாகுபடி செய்ய நிலங்களை உழுது வருகின்றனர்.

விவசாயிகள் ஆர்வம்

இதற்கென பேரம்பாக்கம், இருளஞ்சேரி, பொன்னேரி உட்பட பல பகுதிகளில், நாற்றுகளையும் விட்டு தயாராக வைத்து உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, ""வரும் மாதங்களில் மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதாலும், நெல் விலை உயர்ந்து உள்ளதாலும், சம்பா சாகுபடியில் ஆர்வமாக இறங்கி உள்ளோம். இதே விலை விற்றால் லாபம் கிடைக்கும்,'' என்றனர்.

**மழையை எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2012,06:24 IST

கருத்தை பதிவு செய்ய

தியாகதுருகம்:தென்மேற்கு பருவமழை ஏமாற்றிய நிலையில் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் கவலையுடன் காத்திருக்கும் பரிதாப நிலை உள்ளது.

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இதுவரை பெய்யவில்லை. மழை பெய்யும் என்ற எதிர்பார்ப்போடு விதைப்பு பணிகளை துவக்க காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. மாலை நேரத்தில் மேகங்கள் திரண்டு மழை பெய்வது போன்ற சூழல் ஏற்பட்டாலும் மழை பெய்யாமல் மேகங்கள் கலைந்து விடுகின்றன.

பகலில் வெப்பத்தின் அளவு அதிகம் உள்ளதால் நீர்நிலைகள் வறண்டு கிடக்கிறது. காற்றில் ஈரப்பதம் குறைந்து வறண்ட காற்று வீசுகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் கிணற்று பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தியாகதுருகம் பகுதியில் அதிக அளவில் கரும்பு சாகுபடி செய்துள்ளதால் நீரின்றி பயிர்கள் காய்ந்து வருகின்றன.

மானாவாரி கம்பு சாகுபடி செய்வதை விவசாயிகள் பலரும் தவிர்த்து விட்டனர். மானாவாரி பருத்தி விதைப்பு பணிகளை துவக்கமுடியாமல் தவித்து வருகின்றனர். இதனால் விவசாயத்திற்கு அடிப் படை ஆதாரமாக உள்ள மழையை எதிர்பார்த்து விவ சாயிகள் கவலை யுடன் காத்திருக்கின்றனர்.

**தரமான விதை விற்பனை செய்ய அதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 14,2012,02:53 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தர்ராஜன் வெளியிட்ட அறிக்கை:விதை விற்பனை நிலையத்தில், விதை விற்பனை உரிமத்தை, விவசாயிகளின் பார்வைக்கு தெரியும்படி வைக்க வேண்டும். தகவல் பலகையில், விதைகளின் ரகம், இருப்பு, குவியல் எண் மற்றும் விலை ஆகிய விபரங்களை எழுதி வைக்க வேண்டும். விவசாயிகளுக்கு, விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். அதில் விவசாயி பெயர், பயிர் எந்த வகையான ரகம், காலாவதி தேதி போன்ற விபரங்களை குறிப்பிட வேண்டும்.பட்டியலில், உரம் வாங்குபவரின் கையெழுத்து பெற வேண்டும். விதைகளை, உரங்கள் மற்றும் பூச்சிகள் இல்லாத இடங்களில், தனியாக இருப்பு வைக்க வேண்டும். விற்பனைக்கு வைத்திருக்கும் விதை குவியல்களுக்கு, தரப்பரிசோதனை

அறிக்கை வைத்திருப்பது நல்லது. குறைபாடுள்ள விபர அட்டைகளை வைக்கக்கூடாது. காலாவதியான விதை குவியல்களை, விற்பனைக்கு வைக்கக்கூடாது. விதைகள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்ற தகவல் இடம் பெற்றிருக்க வேண்டும். தரமான விதைகளையே, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கத்தரி, வெண்டைக்காய், தக்காளி, கீரைசாகுபடி செய்தால் மானியம் கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,22:32 IST

தேனி:கத்தரி, வெண்டைக்காய், தக்காளி, கீரை சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை மானியம் வழங்குகிறது.விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் வீரிய ஒட்டுரக விதைகளை பயன்படுத்தி, அதிகளவு சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. இத்திட்டத்தில் வீரிய ஒட்டுரக விதைகளும், சாகுபடி செலவுகளும் ரொக்கமாக வழங்கப்படுகிறது.

கத்தரி சாகுபடி செய்பவர்களுக்கு ஒரு எக்டேருக்கு 12,500 ரூபாயும், வெண்டைக்காய், தக்காளி சாகுபடி செய்பவர்களுக்கு 7500 ரூபாயும், கீரை வகைகளை சாகுபடி செய்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாயும் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டு 112 எக்டேரில் காய்கறி சாகுபடி செய்ய 9.85 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. பந்தல் காய்கறிகளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு பந்தல் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. 40 எக்டேர் பரப்பில் பந்தல் அமைக்க 62.25 லட்சம் நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது. தகுதியும், தேவையும் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பட்டினியில் ஈமுகோழிகள் விவசாயிகள் முறையீடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 13,2012,22:23 IST

தேனி;தேனி மாவட்டத்தில் 2000 ஈமு கோழிகள் தீவனம் கிடைக்காமல், பட்டினியில் இறக்கும் நிலையில் உள்ளதாகவும், அவற்றை காப்பாற்ற தேவையான தீவனத்தை மாவட்ட நிர்வாகம் வழங்க வேண்டும் எனவும், விவசாயிகள் மனு கொடுத்தனர். தேனி மாவட்டத்தை சேர்ந்த சுசி ஈமுபார்ம்ஸ் கோழி வளர்ப்போர் கூட்டமைப்பு பண்ணையாளர்கள் சார்பில் மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் கண்ணன் தலைமையில், கலெக்டர் பழனிசாமியிடம் கொடுத்துள்ள மனு:

மாவட்டத்தில் உள்ள 70 விவசாயிகள் ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள சுசி ஈமு பார்ம்ஸ் இந்தியா லிமிடெட்டில் 2000 கோழிகள் வளர்க்க ஒப்பந்தம் செய்து, வளர்த்து வருகிறோம்.

தற்போது ஏற்பட்டுள்ள பிரச்னையால், இம்மாவட்டத்தில் 2000 கோழிகளுக்கும் தீவன பற்றாக்குறை ஏற்பட்டு,கோழிகள் இறக்கும் நிலையில் உள்ளன. ஈமு கோழிகளுக்கு மற்ற மாவட்டங்களில், மாவட்ட வருவாய்த்துறை மூலம் தீவன கம்பெனியிடம் பேசி, தீவனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, தாங்கள் தலையிட்டு, தேனி மாவட்டத்தில் ஈமு கோழிகளுக்கு தீவனம் வழங்கி, அவற்றின் உயிரை காப்பாற்ற வேண்டும். கோழி வளர்ப்புக்கு மாதச்சம்பளம் அந்த கம்பெனியிடம் இருந்து பெற்றுத்தர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

தினகரன்

கரும்பு சாகுபடி தொழில்நுட்ப முகாம்

பதிவு செய்த நேரம்:2012-08-13 11:55:25

விக்கிரவாண்டி, : விக்கிரவாண்டி அருகே முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி குறித்து தொழில்நுட்ப முகாம் நடந்தது.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் சேகர் தலைமை தாங்கி, முகாமை துவக்கி வைத்தார்.

வேளாண் பயிற்சி நல அலுவலர் அகிலா தேவி வரவேற்றார்.

முகாமில் புதிய ரகங்கள், திசு வளர்ப்பு, செதில் பரு, நாற்றங்கால் முறை, உழவியல் முறைகள், நீர் நிர்வாகம், செம்மை கரும்பு சாகுபடி மற்றும் சொட்டுநீர் பாசனத்திற்கான தொழில் நுட்ப முறைகள் பற்றி கரும்பு வயல்களில் நேரடியாக விரிவாக செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆலையின் தலைவர் கார்த்திகேயன், அபிவிருத்தி துறை தலைவர் ஜெயபால், விரிவாக்கத் துறை தலைவர் லட்சுமணன், தலைமை கரும்பு அதிகாரி சங்கரலிங்கம், விக்கிரவாண்டி வேளாண் உதவி இயக்குனர் அரிகிருஷ்ணன் உட் பட பலர் கலந்து கொண்ட னர். உதவி மேலாளர் சண் முகம் நன்றி கூறினார்.

## லால்குடியில் விதை கிராம திட்ட பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-08-13 11:39:12

திருச்சி, : திருச்சி நவலூர்குட்டப்பட்டு அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற் றும் ஆராய்ச்சி நிலைய 4ம் ஆண்டு மாணவிகளுக்கு ஊரக வேளாண் பயிற்சி முகாம் வரும் 24ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதையொட்டி லால்குடி வட்டாரத்தில் உள்ள பின்னவாசல் மற்றும் கபிரியேல்புரம் பகுதியில் நடந்த விதை கிராமத்திட்ட பயிற்சியில் பங்கேற்ற திருச்சி வேளாண் மாணவிகள் மூலம் விதை முக்கியத்தும், விதைகளின் பற்றாக்குறை தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன. வேளாண் உதவி இயக்குநர் மரியரவி ஜெயக்குமார், அலுவலர் ராஜேந்திரன், உதவி அலுவலர் வேல் முருகன் ஆகியோர் மேற்பார்வையில் சூடோ மோனாஸ் மூலம் விதை நேர்த்தி தொழில்நுட்பம் விளக்கப்பட்டது.

## காவிரி நீரை பெற்று சம்பா சாகுபடியை துரிதப்படுத்த வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-13 10:11:55

நீடாமங்கலம், : காவிரி நீரை பெற்று சம்பா சாகுபடியை துரிதப்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய மாநாடு நேற்று நீடாமங்கலத்தில் நடந்தது. சங்க ஒன்றிய தலைவர் நாகூரான் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் கலியபெருமாள், மாவட்ட செயலாளர் சுந்தரமூர்த்தி, பொருளாளர் ராஜமாணிக்கம், மாவட்ட குழு கந்தசாமி, அக்பர்தீன், ரத்தினம், ஒன்றிய செயலாளர் பூசாந்திரம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.மத்திய, மாநில அரசுகள் கர்நாடக அரசு வழங்க வேண்டிய காவிரி தண்ணீரை பெற்றுக்கொடுத்து சம்பா சாகுபடியையாவது துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 நாள் வேலைக்கு அரசு அறிவித்தபடி ரூ.132 கூலியை உடனே வழங்க வேண்டும். விவசாயத்திற்கும், குடிநீருக்கும் அரசு தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும். நீடாமங்கலத்தில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க பெரியார் சிலையில் இருந்து பழைய நீடாமங்கலம் வையகளத்தூர் இடையே வெண்ணாற்றில் பாலம் அமைக்க வேண்டும். நீடாமங்கலம் நகரில் பொதுமக்கள் நலன்கருதி பொது கழிப்பிடம் கட்டித்தர வேண்டும். நீடாமங்கலம் நகரில் மத்திய பஸ் நிலையம் கட்டிக்கொடுக்க வேண்டும். டி.ஏ.பி, பொட்டாஷ், யூரியா போன்ற உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து குறைகிறது

பதிவு செய்த நேரம்:2012-08-13 11:02:25

மேட்டூர், : மேட்டூர் அணையில் இருந்து வழக்கமாக ஜூன் 12ம் தேதி காவிரி டெல்டா குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கப்படும். போதிய நீர் இருப்பு இல்லாததால் மேட்டூர் அணை இந்தாண்டு திறக்கப்படவில்லை. இதனால் டெல்டா விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடகாவில் பருவ மழை கடந்த சில நாட்களாக தீவிரமடைந்துள்ளது. காவிரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக கபினி அணை நிரம்பியுள்ளது. அதே போல் ஹேமாவதி, ஹேரங்கி அணைகளும் நிரம்பி வருகின்றன. கபினி அணை நிரம்பியுள்ளதால் அணையில் இருந்து கடந்த 9ம் தேதி முதல் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அங்கிருந்து விநாடிக்கு 16 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.  இந்த உபரி நீர் நேற்று முன்தினம் அதிகாலை 3.30 மணியளவில் தமிழக - கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு பகுதிக்குள் நுழைந்தது. மத்திய நீர் ஆணைய அதிகாரிகள் கணக்கெடுத்த போது, விநாடிக்கு 16 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. நேற்று முன்தினம் பகல் 11 மணியளவில் மேட்டூர் அணைக்கு கபினி நீர் வரத் துவங்கியது. துவக்கத்தில் விநாடிக்கு 2 ஆயிரத்து 133 கனஅடி வீதம் நீர் வந்தது. பின்னர் படிப்படியாக வினாடிக்கு 11 ஆயிரத்து 805 கன அடியாக தண்ணீர் வரத்து அதிகரித்தது. இந்நிலையில் நேற்று காலை முதல் நீர் வரத்து குறைந்துள்ளது. நேற்று மாலை வினாடிக்கு 9515 கனஅடியாக தண்ணீர் வரத்து குறைந்தது. ஒரே நாளில் 2 ஆயிரம் கன அடிக்கும் அதிகமாக தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. ஈரோடு, கரூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் குடிநீர் தேவைக்காக அணையிலிருந்து விநாடிக்கு 2004 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 74.26 அடியாக இருந்தது. நீர் இருப்பு 36.47 டிஎம்சி. கர்நாடக மாநிலத்தில் இருந்து வந்த தண்ணீரால் ஒரே நாளில் ஒரு அடி வரை நீர் மட்டம் உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் 73.35 அடியாக இருந்த நீர் மட்டம் நேற்று மாலை 74.26 அடியாக உயர்ந்தது. இந்நிலையில், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால் இந்த ஆண்டு சம்பா சாகுபடிக்காவது தண்ணீர் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர்.

---